**தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்ற, தேறிய சொத்து மாற்றல் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1971 இன் 46 ஆம் இலக்க தெங்கு அபிவிருத்திச் அதிகாரச்சட்டத்தின் , 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்கள் மூலம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினைவழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புடைய கட்டுப்படுத்தும் தரப்பினரின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகார சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு ஒன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது ஆத எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கூட்டுத்தாபனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் காள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்தில் உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது

நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் அதிகாரசபையின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது கட்டுப்பாட்டுச் சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க, அதிகாரசபை செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

### 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறிப்பிட்ட நியமங்களின் தொடர்புகளுடன் இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 1 இன் 88 பந்தி பிரகாரம் நிதி நிலைமைக்கூற்றில் ‘‘ஆதனம் பொறி உபகரணங்கள்’’ ஆக சமர்ப்பிக்கப்பட வேண்டிய கொண்டு செல்லும் பெறுமதி ரூபா 707,590,167 ஆன காணி,கட்டிடங்கள், இயந்திரங்கள்,மோட்டார் வாகனங்கள் மற்றும் ஏனைய உபகரணங்களாக | நிதி நிலைமைக்கூற்றில் முன் பக்கத்தில் ”நிலையான சொத்துக்கள்” என பட்டியலிடப்பட்டுள்ள அனைத்து பொருட்களும் ‘‘ஆதனம் பொறி உபகரணங்கள்’’ ஆக 2023 ஆம் ஆண்டு முதல் | நியமத்தின் அறிவுறுத்தல் பிரகாரம் நிதி நிலைமைக்கூற்றில் முன் பக்கத்தில் வரிசை உருப்படிகள் சரியாக காட்டப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ”நிலையான சொத்துக்கள்” ஆக பெயரிடப்பட்டிருந்தன. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.. | |
| (ஆ) | புதிய முதலீடுகளை செய்தல் மற்றும் முதலீடுகளைப் பணமாக்குதல் காசுப்பாய்ச்சலில் முதலீட்டு நடவடிக்கைகளில் தனித்தனியாக காட்டப்பட வேண்டிய போதிலும் ரூபா 645,618,450 மதிப்புள்ள நிலையான வைப்புத்தொகை மற்றும் ரூபா 633,429,118 மதிப்புள்ள நிலையான வைப்புத்தொகைகள் பணமாக்கப்பட்டமை இவ்வாறு வெளிக்காட்டப்படாமல் அந்த இரண்டு நிலுவைகளின் தேறிய மதிப்பாகிய ரூபா 12,189,332 முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | காசுப்பாய்ச்சல் கூற்றில் பணப் பெறுவனவு மற்றும் கொடுப்பனவுகளின் தேறிய மதிப்பு மட்டுமே காட்டப்பட்டுள்ளதுடன் 2023 ஆம் ஆண்டு முதல், பண பெறுவனவு மற்றும் கொடுப்பனவுகளை தனித்தனியாக காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காசுப்பாய்ச்சல் கூற்றில் பணப் பெறுவனவு மற்றும் கொடுப்பனவுகள் தனித்தனியாக காட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 2 இன் 9 பந்தி பிரகாரம் 03 மாதங்கள் அல்லது அதற்கும் குறைவான காலத்தில் முதிர்ச்சியடைகின்ற ரூபா 186,144,876 மதிப்புள்ள 13 நிலையான வைப்புத்தொகைகளும் ரூபா 3,472,558 மதிப்புள்ள 3 திறைசேரி உண்டியல்கள் மற்றும் ரூபா 57,264,130 மதிப்புள்ள 2 சேமிப்பு வைப்புத்தொகைகளுமாக மொத்தம் ரூபா 246,881,564 பணம் மற்றும் பணத்திற்குச் சமமானவைகளாக காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்படுவதற்குப் பதிலாக நடைமுறை சொத்துகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | மூன்று மாதங்களுக்கொரு முறை முதிர்வுகள் மீண்டும் வட்டியுடன் தானாக முதலீடு செய்யப்படுகின்ற திறைசேரி உண்டியல்கள், 2023 ஆம் ஆண்டு முதல் பணம் மற்றும் பணத்திற்குச் சமமானவைகளாக காட்டப்படும். | நியமத்தின் ஏற்பாடுகளிற்கு இணங்க பணம் மற்றும் பணத்திற்குச் சமமானவைகள் வகைப்படுத்தப்பட்டு நிதி நிலைமைக்கூற்றில் காட்டப்பட. வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 7 இன் 65 பந்தி பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்தின் எஞ்சிய மதிப்பு மற்றும் பயனுள்ள ஆயுட்காலம் ஆண்டுதோறும் மீளாய்வு செய்யப்படாத காரணத்தினால் மீளாய்வாண்டின் இறுதியில் முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட மர தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் ரூபா 6,750,343 உம், கணினி உதிரிப்பாகங்கள் ரூபா 9,091,286 மற்றும் இயந்திரங்கள் ரூபா 7,743,514 அதாவது மொத்தம் ரூபா 23,585,143 ஆன நடைமுறையல்லாச் சொத்துக்கள் தொடர்ந்தும் | கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி குறிப்பிட்ட சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வதற்கு தவறிவிட்டோம் என்பதை ஒப்புக்கொள்கின்றேன். மீள்மதிப்பீடு செய்வதற்கு முனனர் சொத்துக்களை அடையாளம் காண்பதில் சில சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதால், இந்த சொத்துகளை மீள்மதிப்பீடு செய்வது தாமதமாகியுள்ளது. | நியமத்தின் அறிவுறுத்தல் பிரகாரம் முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட ஆனால் தொடர்ந்தும பயன்பாட்டில் உள்ள சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் மீண்டும் மீளாய்வு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்தப்படுகின்ற போதிலும் அதனால் ஏற்பட்ட மதிப்பிடப்பட்ட பிழையானது இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 3 இன் பிரகாரம் சரிசெய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 7 இன் 86 பந்தி பிரகாரம் தேய்மானமிடப்படுகின்ற சொத்துக்கள் தொடர்பாக பயன்படுத்தப்படும் பயனுள்ள ஆயுட்காலம் அல்லது பயன்படுத்தப்படும் தேய்மான விகிதம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேணடிய போதிலும், ஆய்வக உபகரணங்கள் மற்றும் பாதுகாப்பு கேமரா உபகரணங்களுக்கான தேய்மான விகிதங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. | 2023 ஆம் ஆண்டு முதல் ”ஆய்வக உபகரணங்கள்” மற்றும் ”பாதுகாப்பு கேமரா கருவிகள்” என்ற இரண்டு தனித்தனி தலைப்புகளின் கீழ் தேய்மான விகிதத்தைக் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் ஏற்பாடுகளிற்கு இணங்க தேய்மானமிடப்படு கின்ற சொத்துக்களுக்கான தேய்மான விகிதங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஊ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 12 இன் 39 மற்றும் 40 ஆம் பந்திகளுக்கு இணங்காத வகையில் 99 வருட குத்தகை அடிப்படையில் அதிகாரசபைக்கு வழங்கப்பட்ட ரூபா 340,000,000 ஆன டியூக் வீதி அலுவலக காணி நிதிக்கூற்றுக்களில் குத்தகை சொத்துக்களுக்கு பதிலாக ”காணிகள்” எனக் கணக்கிடப்பட்டிருந்தது. குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்கள் பற்றிய தேவையான வெளிப்பாடுகள் எதுவும் கணக்குகளில் செய்யப்படவில்லை. | 2022 ஆம் ஆண்டில் தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் சுட்டிக்காட்டியபடி, இந்த காணியை குத்தகை சொத்தொன்றாக காட்டப்படுததற்கு உரிய சீராக்கம் 2023 ஆம் ஆண்டு முதல் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் அறிவுறுத்தல் பிரகாரம் குத்தகை சொத்துக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (எ) | 1987 ஆம் ஆண்டு முதல் 99 வருட குத்தகை அடிப்படையில் சுவீகரிக்கப்பட்ட 80 பேர்ச்சஸ் ஆன இரத்தினபுரி காணி மற்றும் ரூபா 121,544,000 மதிப்புடைய நாரஹேன்பிட்டி தலைமை அலுவலக காணி அதிகாரசபை சபையால் கணககீடு செய்யப்படவில்லை. | 80 பேர்ச்சஸ் ஆன இரத்தினபுரி காணி 2023 பெப்ரவரி இல் கண்டுபிடிக்கப்பட்டது. இது தொடர்பில் மேலும் உறுதிப்படுத்தப்பட்டு, நாரஹேன்பிட்டி தலைமைக் காரியாலயத்தில் உள்ள காணியும் 99 வருட குத்தகையாக 2023 ஆம் ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் அறிவுறுத்தல் பிரகாரம் சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 18 இன் 13 பந்தி பிரகாரம் சொத்துக்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய எதிர்கால பொருளாதார நன்மைகள் நிறுவனத்திற்குள் விரைந்து உள்வருவதற்கான சாத்தியமொன்று காணப்படுகின்ற போது அது உயிரியல் சொத்தாக அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும், அதிகாரசபைக்கு சொந்தமான துங்கன்னாவ தோட்டத்தில் உள்ள மரங்களின் பெறுமதியுடன் பலா மற்றும் கும்புக் மரங்களும் 46 தேக்கு மரங்களும் பௌதீக கணக்கெடுபபில் அடையாளம் காணப்பட்டிருந்த போதிலும் அந்த மரங்களின் மதிப்பு மதிப்பிடப்பட்டு கணககீடு செய்யப்படவில்லை. | கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, உயிரியல் சொத்துக்கள் இதுவரை அதிகாரசபையால் கணக்கீடு செய்யப்படவில்லை. 2023 ஆம் ஆண்டில் உயிரியல் சொத்துக்கள் கணக்கீடு செய்யப்படும். | நியமத்தின் அறிவுறுத்தல் பிரகாரம் உயிரியல் சொத்துக்கள் சரியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கோட்டை டியூக் தெருவில் அமைந்துள்ள குத்தகைக் காணியொன்று அதிகாரசபைக்கு சொந்தமான காணியாக மீள்மதிப்பீடு செய்யப்பட்டதால், 2022 திசெம்பர் 31 அன்று ரூபா 36,050,400 ஆக இருக்க வேண்டிய காணி மீள்மதிப்பீடு ஒதுக்கத்தின் பெறுமதி ரூபா 355,682,930 மிகையாக காட்டப்பட்டு ரூபா 391,733,330 ஆக அறிக்கையிடப்பட்டிருந்தது. | கடந்த 30 வருடங்களுக்கும் மேலாக கொழும்பு கோட்டை டியூக் தெருவில் கட்டிடம் அமைந்துள்ள காணி அதிகாரசபைக்கு சொந்தமான இலவச காணியாகக் கணக்கில் கொள்ளப்பட்டதால் இந்தக் கணக்கீட்டுக் குறைபாடு ஏற்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் இக்காணி இலவச காணியொன்றாக அன்றி குத்தகைக் காணியொன்றாக கணக்குகளில் காட்டப்பட வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 இல் கட்டிடங்களின் மீள்மதிப்பு பெறுமதி ரூபா 220,464,200 ஆக இருந்ததுடன் நிதிக்கூற்றுக்களில் ரூபா 216,668,700 என தவறாக குறிப்பிடப்பட்டதால், கட்டிடங்களின் பெறுமதி ரூபா 3,795,500 ஆல் மற்றும் கட்டிட தேய்மானப் பெறுமதி ரூபா 94,888 ஆல் குறைவாக கணககீடு செய்யப்பட்டிருந்தது. | துங்கன்னாவ தோட்டத்தில் ஏனைய நிர்மாணங்களின் மீள்மதிப்பு பெறுமதியான ரூபா 33,795,500 கணக்கிடப்பட்டபோது விடுபட்டுள்ளது. இந்த பெறுமதி 2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் மூலம் சரிசெய்யப்படும். | மீளாய்வாண்டிற்கான கட்டிடங்களின் பெறுமதி மற்றும் தேய்மானம் சரியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |
| (இ) | ஏற்றுமதியாளர்களிடம் இருந்து ஒரு கிலோகிராம் வெட்டப்பட்ட தேங்காய்க்கு 20 சதம் வீதம் வசூலித்து, ஆலை உரிமையாளர்களுக்கு தொடங்கப்பட்ட சேமிப்புக் கணக்கில் செலவு வைப்பதன் மூலம் வெட்டப்பட்ட தென்னை | திசிதி ஆலை உரிமையாளர்களின் கணக்குகளுக்கு (ஆலை அபிவிருத்தி நிதியத்திற்கு ) பணம் செலவு வைப்பது திறைசேரியிலிருந்து பெறப்படுகின்ற மூலதன நிதியில் இருந்து | மீளாய்வாண்டிற்கான திசிதி ஆலை உரிமைக் கணக்கு மற்றும் சேமிப்பு கணக்குகளுக்கு உரிய பணம் அக்கணக்குகளில் சரியாக காட்டப்பட |

| | | | |
|---|---|---|---|
| | தொழிற்சாலைகளின் அபிவிருத்திக்காக தென்னை அபிவிருத்தி அதிகாரசபையால் பராமரிக்கப்படுகின்ற நிதியத்திலிருந்து , திசிதி ஆலை அபிவிருத்தி நிதியத்திற்கு பணம் செலவு வைப்பதற்காக 2022 ஆம் ஆண்டில் பணிப்பாளர் குழு அங்கீகாரம் வழங்கப்பட்டு மொத்தம் ரூபா 5,128,893 ஆன தொகை அந்த நிதியத்திற்கு செலவு வைக்கப்படாததால் நிதியத்தின் மதிப்பு அந்த தொகையால் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும், மூன்று ஆலை உரிமையாளர்களுக்கு சேமிப்பு கணக்குகளும் தொடங்கப்படவில்லை. | செய்யப்படுகிறது. 2022 ஆம் ஆண்டு முதல் மூலதன நிதி கிடைக்காததால், இந்தக் கணக்குகள் செலவு வைக்கப்படவில்லை. | வேண்டும். |
| (ஈ) | 2022 திசெம்பர் 27 ஆம் திகதிய 609/PD/02 ஆம் இலக்க பணிப்பாளர் குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் ஆலை உரிமையாளருக்கு உலோக கண்டுபிடிக்கும் இயந்திரமான்றை நிறுவுவதற்கு ரூபா 681,312 தொகைக்கு வழங்குவதற்கு பணிப்பாளர் குழுவின் அங்கீகாரம் வழங்கப்பட்டபோதிலும் 2022 ஆம் ஆண்டில் அந்தத் தொகை வழங்கப்படாததுடன் நிதிக்கூற்றுக்களில் செலுத்த வேண்டிய செலவொன்றாக கணக்கு் வைக்கப்படவும் இல்லை. | 2022.12.12 ஆம் திகதிய 609/PD/02 ஆம் இலக்க நிறைவேற்று பத்திரத்தின் பிரகாரம் M -105: DY மற்றும் DU ராஜபக்ச திசிதி உற்பத்தி நிறுவனத்திற்கு ரூபா 681,312 தொகையொன்றை வழங்குவதற்கு விண்ணப்பித்து, அதற்கான ஒப்புதல் 2022.12.27 ஆம் திகதிய 607/15/2022 ஆம் இலக்க பணிப்பாளர் குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் வழங்கப்பட்டது. 517720 ஆம் இலக்க காசோலை மூலம் 2023 ஆம் ஆண்டு பணம் செலுத்தப்பட்டதால், 2022 ஆம் ஆண்டில் இக் கொடுப்பனவு பதிவு செய்யப்படவில்லை. | மீளாய்வாண்டிற்கான செலுத்த வேண்டிய செலவுகள் சரியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |
| (உ) | 2022 திசெம்பர் 31 இல் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்புகளின் கீழ் ”முன்பு பெற்ற முற்பணம்” ஆக ரூபா 6,006,609 நிலுவைத் தொகை குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அந்த வருமானம் இனங்காணப்பட்டு சரியாகக் கணக்கீடு செய்யப்படவில்லை. | 2022 ஆம் ஆண்டு வரை விலைப்பட்டியல் வழங்குவதில் சில குறைபாடுகள் இருந்ததுடன், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு மற்றும் கணக்காய்வு அலுவலகம் சுட்டிக்காட்டிய குறைபாடுகள் சரி செய்யப்பட்டு, 2023 ஆம் ஆண்டு முதல் சேவையை வழங்குவதற்கு முன்பு பணம் வசூலிக்கும் முறை பயன்படுத்தப்படும். | மீளாய்வாண்டிற்கான கட்டண வருமானம் சரியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | 2022 திசெம்பர் 31 இல் நிலையான வைப்புக்களின் கீழ் காணப்படுகின்ற இலங்கை வங்கியின் 03 மாதங்களில் முதிர்வடையும் கணக்கு இலக்கம் 89704304 மற்றும் 89704323 இல் உள்ள நிலையான வைப்புகளின் மதிப்புகள் முறையே ரூபா 12,618,450 மற்றும் ரூபா 50,000,000 ஆக இருந்தபோதிலும் நிதிக்கூற்றுக்களில் 2023 சனவரி 11 இல் முதிர்வடையும் பெறுமதியாக ரூபா 13,313,398 மற்றும் ரூபா 52,753,699 ஆக அறிக்கையிடப்பட்டிருந்ததால் நிலையான வைப்புக்களின் பெறுமதி ரூபா 3,448,647 ஆலும் வட்டி வருமானம் ரூபா 1,382,008 ஆலும் பெற வேண்டிய வைப்பு வட்டி வருமானம் ரூபா 2,066,639 ஆலும் அதிகமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023-01-11 அன்று செலுத்த வேண்டிய ரூபா 62,618,450 மதிப்புள்ள இரண்டு நிலையான வைப்புத்தொகைகள் 2022-12-11 அன்று முதிர்ச்சியடைவதாகக் கருதி, வட்டி வருவாமானத்தை கணக்கிட்டதால் அத்தவறு ஏற்பட்டுள்ளது. | மீளாய்வாண்டிற்கான முதலீட்டு வட்டி வருமானம் மற்றும் பெற வேண்டிய முதலீட்டு வட்டி வருமானம் சரியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |
| (எ) | தொண்ணூற்றொன்பது வருட குத்தகையின் அடிப்படையில் அதிகாரசபையால் கையகப்படுத்தப்பட்ட கோட்டை மற்றும் இரத்தினபுரி காணிகளுக்கு வருடாந்த குத்தகைப்பணம் செலுத்தப்படாததுடன் குத்தகை ஒப்பந்தங்களின்படி, குறிப்பிட்ட காலத்திற்குள் குத்தகை செலுத்துவதற்கு தவறினால் வட்டியுடன் சேர்த்து குறிப்பிட்ட வரித் தொகையை செலுத்த வேணடிய போதிலும் நாரஹேன்பிட்டியில் உள்ள தலைமை அலுவலகத்திற்கும் 2020 ஆம் ஆண்டுக்குப் பின்னர் குத்தகை செலுத்தப்படவில்லை. | 99 குத்தகையின் கீழ் எடுக்கப்பட்டுள்ள நாரஹேன்பிட்டி, கோட்டை, இரத்தினபுரி ஆகிய காணிகளுக்கு செலுத்த வேண்டிய குத்தகைத் தொகையை தெரிவிக்குமாறு நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன், அதன் பின்னர் பணம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். நாரஹேன்பிட்டி அலுவலகத்தில் 2020 ஆம் ஆண்டு வரை குத்தகை செலுத்தப்படடுள்ளது. | அதிகாரசபை குத்தகையின் அடிப்படையில் பெற்றுக்கொண்ட காணிகளின் குத்தகைப்பணத்தை குறிப்பிட்ட காலத்தில் செலுத்த வேண்டும். |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு

#### 1.6.1 பெறவேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகாரசபையின் தேங்காய் எண்ணைய் விலை நிர்ணய நிதியத்திலிருந்து மற்றும் மூலதன அபிவிருத்தி நிதியத்திலிருந்து கம்பனியொன்றுக்கு 1985 ஆம் ஆண்டின் போது வழங்கியிருந்த கடன் ரூபா 26,715,037 ஆன | இந்த கம்பனியிடம் இருந்து பெறவேண்டிய பணத்தை அறவிடுவதற்கு தொடர் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2022 சனவரி முதல் 2023.05.08 வரை, | தாமதமின்றி அறவிட வேண்டிய கடன் மற்றும் வட்டி என்பன அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகையொன்றும் 2002 மற்றும் 2004 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 31,550,000 ஆன கடன் தொகையொன்றும் அதாவது மொத்தம் ரூபா 58,265,037 மற்றும் கடன் வட்டித் தொகை ரூபா 60,174,135 உம் மீளாய்வாண்டின் இறுதி வரை 37 ஆண்டுகளிற்கு அதிக காலமாக நிலுவையாக காணப்பட்டன. | இது தொடர்பாக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கம்பனி கடன் பணம் மற்றும் வட்டியைச் செலுத்தி இருக்கவில்லை. | |
| (ஆ) | அதிகாரசபையால் 2014 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தேங்காய் பால், தேங்காய் மாவு மற்றும் தேங்காய் கிரீம் தயாரிப்புகளை பொது மக்களுக்கு விளம்பரப்படுத்தும் செயற்திட்டத்திற்காக ருபவாஹினி கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 9,344,832 ஆன தொகையொன்று செலுததப்பட்டு ரூபா 2,284,800 ஆன தொகைக்கு மட்டும் விளம்பரம் செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 7,060,032 ஆன தொகை அறவிடப்படுவதற்கு அல்லது விளம்பரம் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 8 ஆண்டுகளிற்கு அதிக காலமாக நானாவித கடன்பட்டோராக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | 2023 ஆம் ஆண்டில் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் தொலைக்காட்சி விளம்பரங்களுக்காக இந்தத் தொகையைப் பயன்படுத்துவதற்கான பணிப்பாளர் சபையின் தீர்மானத்தை அதிகாரசபை பெற்றுக்கொண்டது. அதன்படி, தேசிய தொலைக்காட்சி ஒளிபரப்பு நேரம் (TV Schedule) மறுசீரமைக்கப்பட்டு, 2023 ஆம் ஆண்டின் ஜூலை 25 ஆம் திகதி முதல் மேற்படி விளம்பரங்களை ஒளிபரப்புச் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. | 2014 ஆம் ஆண்டு செலுத்திய தொகைக்கு ஏற்றவாறு விளம்பரங்கள் பெறப்படுவதற்கு அல்லது செலுத்திய தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | அதிகாரசபையில் பதிவுசெய்யப்பட்ட தேங்காய் ஆலைகளின் உரிமையாளர்களிடமிருந்து வெட்டப்பட்ட தேங்காய் பரிசோதனைக் கட்டணம் மற்றும் நீர் மாதிரி பரிசோதனைக் கட்டணங்கள் தொடர்பாக 2019 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை ரூபா 5,814,594 உம் தென்னை நார் அடி மூலக்கூறு பரிசோதனைகளுக்கு ரூபா 211,938 உம் உற்பத்தி செய்யப்பட்ட தேங்காய்ப்பால் பரிசோதனைகளுக்கு 2020 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை ரூபா 1,180,985 உம் உட்பட மொத்தம் ரூபா 7,207,517 ஆன கட்டணம் மீளாய்வாண்டின் இறுதி வரை வசூலிக்கப்படவில்லை. | இந்த நிலுவையில் உள்ள கட்டணங்களில் சில நேரடி வைப்புத்தொகை மூலம் செலுத்தப்பட்டுள்ளன. அவற்றை அடையாளம் காண்பதற்கான உதவியைப் பெற்றுக் கொள்வதற்கு தொழில்துறைகளுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. சில தொழிலதிபர்களின் செயல்திறன் இந்த ஆண்டு குறைவாகக் காணப்பட்டதால் நிலுவைக் கட்டணத்தை வசூலிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. | இந்த நிலுவைத்தொகைகள் உடனடியாக வசூலிக்கப்பட வேண்டும் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு முன்னர் பணத்தை மீளப்பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2017 மார்ச் 01 ஆம் திகதிய 546/F/01 ஆம் இலக்க பணிப்பாளர் குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் | லோஹோர் ஆர்யா நிதியத்திற்கு வழங்கப்பட்ட கடன் முறையை இரத்து செய்துள்ளதுடன் | அறவிடவேண்டிய கடன் மற்றும் வட்டி விரைவில் அறவிடப்பட |

| | | |
|---|---|---|
| அதிகாரசபையின் நலன்புரிச் சங்கத்தால் ஊழியர் கடன் முன்மொழிவுத்திட்டமொன்று செயற்படுத்தப்படுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டு அதற்காக அதிகாரசபையால் வழங்கப்பட்ட ரூபா 2,007,438 ஆன தொகையொன்று 5 ஆண்டுகள் காலமாக நலன்புரி நிதியத்தில் இருந்து பெற வேண்டிய மீதியாக நிதிசக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | அதிகாரசபையில் தொடங்கப்பட்டுள்ள நலன்புரி கடன் முன்மொழிவுத்திட்டம் தொடங்குவதற்காக இந்த கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது. இந்த கடன் முன்மொழிவுத்திட்டம் இரத்து செய்யப்படும் நாளில் இந்தத் தொகையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 98,651,996 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 18,945,738 ஆகும். அதன் பிராகரம் நிதி விளைவுகளில் ரூபா 117,597,734 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. கடந்த ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் மதலீட்டு வட்டி வருமானம் ரூபா 67,390,693 ஆல் அதிகரித்தமை இம்முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக இருந்தது.

**2.2 விகிதப் பகுப்பாய்வு**

மீளாய்வாண்டில் நடைமுறைச் சொத்து மற்றும் விரைவுச் சொத்து விகிதம் 6:1 ஆக இருந்ததுடன் கடந்த வருடத்தில் அவ்விகிதங்கள் 3:1 ஆக இருந்தன. 2022 ஆம் வருடத்தில் குறுங்கால வங்கி வைப்புக்களின் பெறுமதி ரூபா 844,677,850 ஆக இருந்தமையால் நடைமுறை மற்றும் விரைவுச் சொத்து விகிதங்கள் உயர்ந்த மதிப்பொன்றை எடுத்திருந்தன

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்பாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகாரசபைக்கு சொந்தமான கோட்டை டியூக் தெருவில் உள்ள 17,866 சதுர அடிகளைக் கொண்ட 4 மாடி அலுவலகக் கட்டிடம் 2022 ஆம் ஆண்டில் மதிப்பீட்டுத் திணைக்களத்தால் ரூபா 340 மில்லியனாக மதிப்பிடப்பட்டது. இதில் 5,154 சதுர அடியைக் கொண்ட முதல் மாடி 2018 ஆம் ஆண்டு முதல் மற்றும் 2,600 சதுர அடியைக் கொண்ட இரண்டாம் மாடி 2020 ஆம் ஆண்டு முதல் குறைப் பயன்பாடுடையதாக காணப்பட்டன. இந்த வளாகத்தின் மீதமுள்ள 2 தளங்களில் 49 அதிகாரிகளைக் கொண்ட மூன்று பிரிவுகள் இயங்கி வருகின்றன. அதிகார சபையின் தலைமை அலுவலகமும் நாரஹேன்பிட்டியில் 27,531 சதுர அடி கட்டிடத்தில் இயங்கி வருகின்றது. வணிக | அதிகாரசபையின் செயற்பாடுகளின்படி, இது 05 பிரதான பிரிவுகளைக் கொண்டுள்ளதுடன் இதில் தேங்காய் தொடர்பான உற்பத்தி பொருட்களை ஏற்றுமதி செய்பவர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு அதிக பங்களிப்பை வழங்கும் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி பிரிவு மற்றும் செயலாக்க அபிவிருத்தி பிரிவு ஆகியவை கோட்டை அலுவலக கட்டிடத்தில் | சொத்துக்களிலிருந்து அதிக பட்ச பயன் பெறப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பு ரூபா 340 மில்லியன் கொண்ட இந்த வளாகத்தின் மிகையாக காணப்படுகின்ற இடம் எந்த ஒரு பயனுள்ள நோக்கத்திற்காகவும் பயன்படுத்தப்படவில்லை. | நிறுவப்பட்டுள்ளன. இது தவிர, உள்ளக கணக்காய்வு பிரிவு மற்றும் நூலகம் என்பன இந்தக் கட்டிடத்தில் நிறுவப்பட்டுள்ளது. இந்த அலுவலக கட்டிடத்தின் தரை மாடியில் வர்த்தக சேவை நிலையமொன்று நிறுவப்பட்டுள்ளதுடன் தரை தளத்தில் தகவல் தொழில்நுட்ப பிரிவு, திட்டமிடல் பிரிவு, ஊடக பிரிவு, வாடிக்கையாளர் சேவை நிலையம், ஜனாதிபதி அலுவலகம் மற்றும் ஜனாதிபதி செயலகம் என்பன நிறுவப்பட்டுள்ளன. | |
| (ஆ) | தெங்கு உற்பத்திகளில் உள்ளடங்கும் சீனி அளவு, விட்டமின் அளவு, கழிவு அளவுகளை (PAH) பரிசோதித்தல், ஏற்றுமதி செய்யப்படும் வெட்டப்பட்ட தேங்காய் மற்றும் தேங்காய் எண்ணெய்யில் SLS 98:2013 கொண்ட இலங்கை தரநிர்ணயத்திற்கு அமைய நிலவும் எப்லடொக்சின் பரிசோதனை செய்தலையும் நோக்காகக் கொண்டு 2017 ஆம் ஆணடு முதல் 2022 திசெம்பர் 31 வரை ரூபா 15,574,140 செலவிடப்பட்டு இற்கு கொள்வனவு செய்யப்பட்ட High Performance Liquid Chromo to Graph (HPLC) இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்ட திகதி முதல் குறைபாடுகள் அறிக்கையிடப்பட்டுள்ளமை மற்றும் இரசாயனகூட நவீனமயமாக்கல் நடவடிக்கைகள் பூர்த்தியடைந்திருக்காத போதும் இயந்திரத்தை கொள்வனவு செய்தல் மற்றும் பகுப்பாய்வு ஊழியர் வெற்றிடங்கள் காணப்படுதல் போன்ற விடயங்கள் காரணமாக இயந்திரம் செயற்படாது இருந்ததுடன் 2018 ஆண்டில் இயந்திரத்தின் உத்தரவாத காலமும் முடிவடைந்திருந்தது. 2022 திசெம்பர் 31 இல் 83 பரிசோதனைகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | திசிந்தி தேங்காய்க்கான இலங்கை தரநிலை (SLS 98:2013) 2013 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டதுடன் . Aflatoxin அளவுரு முதன்முறையாக சேர்க்கப்பட்டுள்ளது. HPLC உபகரணங்களைப் பயன்படுத்தி Aflatoxin பரிசோதனை செய்யும் முறை பரிந்துரைக்கப்படுகிறது. அதன்படி, கடந்த 2016 ஆம் ஆண்டு HPLC உபகரணமொன்று கொள்வனவு செய்யப்பட்டது. இக்காலத்தில் ஆய்வுக்கூடத்தில் பராமரிப்பு பணிகள் நடைபெறுவதால் நிரந்தரமாக சரிசெய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டு நவீனமயமாக்கல் பணிகள் நிறைவடைந்த போதிலும், அப்போது அதிக வெற்றடங்கள் காணப்பட்டதால் இக்கருவிகளை திறமையாக பயன்படுத்தி பரிசோதனைகளை | பயன்படுத்துவதற்க தகுந்த பின்னணி இல்லாத நிலையில் செய்யப்பட்ட இந்தக் கொள்வனவு தொடர்பாக விசாரணை நடாத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மேற்கொள்வதற்கு முடியவில்லை.<br><br>தரநிலைகளில் சேர்க்கப்பட்டுள்ள பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு HPLC உபகரணங்களைப் பயன்படுத்த முடியுமென்பதுடன் , ஆனால் அதிகாரசபையால் இந்தத் தயாரிப்புகள் தொடர்பாக நேரடி ஒழுங்குபடுத்தலொன்று மேற்கொள்ளப்படாமை யால் இந்த பரிசோதனைகளுக்கு கோரிக்கைகள் எதுவும் பெறப்படவில்லை. | |
| (இ) | தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் தென்னைச் செய்கைக்கான கையேட்டின் பிரகாரம், தென்னைச் செடிகளை நட்டு 06 மாதங்களுக்கு ஒருமுறை உரமிட வேண்டும் என்றாலும், 25 ஏக்கரில் பயிரிடப்பட்ட துங்கன்னாவ தென்னந்தோப்புக்கு இறுதியாக 2020 ஆம் ஆண்டு ஒக்டோபர் 13 ஆம் திகதி இரசாயன உரம் இடப்பட்டது. இதன்படி, துங்கன்னாவ தோட்டத்தில் 1,147 தென்னை மரங்களின் 8 முறை உற்பத்தியானது 2021 ஆம் ஆண்டில் 72,460 தேங்காய்களாகவும், மீளாய்வாண்டில் அது 65,365 ஆகவும் காணப்பட்டதுடன், 2021 ஆம் வருடத்துடன் ஒப்பிடுகையில் இது சுமார் 10 வீத வீழ்ச்சியடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | சுற்றுச்சூழல் காரணிகளாலும், காலநிலை காரணங்களாலும் தேங்காய் விளைச்சல் குறைவு. அந்தந்த ஆண்டுகளில் பருவநிலை காரணிகள் பயிர்ச்செய்கைக்கு ஏற்ற அளவில் இருந்தாலும், 2021 இல் உரம் இல்லாததால், 2022 இல் விளைச்சல் குறைந்துள்ளது. | தென்னந்தோப்புக் களுக்கு உரிய நேரத்தில் உரங்களைப் பயன்படுத்தி அறுவடையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | தென்னை நார் தொழில் வளர்ச்சிக்கு தேவையான அறிவு மற்றும் பயன்படுத்தப்படும் இயந்திரங்கள் மற்றும் உற்பத்தி முறைகள் குறித்து தொழில்துறையினர், புதிய தொழில் முனைவோர், மாணவர் சமூகம் போன்றோருக்கான பயிற்சி நிலையமாக 2006 ஆம் ஆண்டில் துங்கன்னாவ தென்னை நார் அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலையம் நிறுவப்பட்டதுடன் தென்னை நார் தொழில்துறைக்கு புதிய அறிவையும் தொழில்நுட்பத்தையும் வழங்குவதன் மூலம் உயர்தர தென்னை நார் உற்பத்திகளை அறிமுகப்படுத்துவதில் முன்னோடியாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டது. ஆயினும்கூட ( 2020 ஆகஸ்ட் 26 ஆம் | 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தின் போது, துங்கன்னாவ தென்னை நார் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தை மீள ஆரம்பிப்பதற்கும், அதனை வருமானம் ஈட்டக்கூடியதாக மாற்றுவதற்கும், பயிற்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற் கும், அரச-தனியார் | துங்கன்னாவ பயிற்சி நிலையத்தின் பணிகள் செயற்பாடுகளை ஆரம்பிப்பதன் மூலமோ அல்லது வேறு ஏதேனும் பொருத்தமான வேலைத்திட்டத் தைப் பயன்படுத்துவதன் மூலமோ செயற்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திகதிய CDA/PD/FM/2020/Program -003 ஆம் இலக்க பணிப்பாளர்-திட்டமிடல் அபிவிருத்தி வெ.ப.ஹே கடிதத்தின்படி) வெளி தரப்பினரக்கு குத்தகைக்கு விடும் நோக்கத்தில் 2020 செப்டம்பர் 1 முதல் தென்னை நார் அபிவிருத்தி தொடர்பான தொழிற்சாலையின் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டிருந்தன. 2023 ஜுன் 02 அன்று நடாத்தப்பட்ட சுயாதீன கணக்காய்வு பரிசோதனைப் பிரகாரம் பயிற்சி நிலையத்தின் செயல்பாடுகள் மீண்டும் தொடங்கப்படுதல் அல்லது தென்னை நார் தொழிற்சாலை வெளித் தரப்பினருக்கு குத்தகைக்கு விடப்படுதல் மேற்கொள்ளப்படவில்லை. | பங்காளித்துவமாக செயற்திட்டமாக அபிவிருத்தி செய்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து அறிக்கை செய்வதற்கும் உத்தரவிடப்பட்டது. அதன்படி, 2022 ஆம் ஆண்டுக்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில், தென்னை நார் ஆலையை குறைந்தபட்ச செலவில் நிலையத்தில் இயககுவதற்க ரூபா 2.48 மில்லியன் ஒதுக்கப்பட்டு பழுது பார்க்கும் பணிகளை மீண்டும் செய்வதற்கு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | |
| (உ) | தென்னை தொடர்பான தொழில்கள் மூலம் அதிகாரசபைக்கு மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவுகள் கொடுப்பனவுகள் நுழை வாயில் “Payment Gateway ” மூலம் செய்யப்படுவதற்கு 603/DG/01 2022 மே 25 ஆம் திகதிய 607/09/03 ஆம் இலக்க பணிப்பாளர் குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் 2022 நவம்பர் 23 அன்று செலான் வங்கியில் நடைமுறைக் கணக்கொன்று தொடங்கப்பட்டாலும், அக்கொடுப்பனவு நுழைவாயில் மூலம் எவ்வித கொடுப்பனவகளும் 2023 மே மாதம் வரையில் செய்யப்படவில்லை. | செலான் வங்கியின் மூலம் செயல்படுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ள “Payment Gateway ” மூலம் பணம் பெற்றுக்கொள்ளும் முறை இதுவரை நடைமுறைப்படுத்தப்பட வில்லை என்பதுடன் எதிர்காலத்தில் அதிகார சபையின் கணனி முறைமை தயாரிக்கப்பட்டதன் பின்னர் நடைமுறைப்படுத்தப்படவத ற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | அதிகாரசபைக்கு மேற்கொள்ளப்படு கின்ற கொடுப்பனவுகளை செய்வதற்கு கொடுப்பனவுகள் நுழைவாயில் பயன்படுத்தப்பட வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறமையின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேங்காய் தண்ணீர், தேங்காய் உற்பத்தி தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் கழிவு நீரில் உள்ள துத்தநாகம், தாமிரம் மற்றும் ஈயம் போன்ற கனரக உலோகங்களைக் கண்டறியும் கனரக உலோக பரிசோதனை உபகரணம் (Atomic Absorption Spectrophotometer) 2022 யூலை 15 ஆம் திகதி முதல் அதன் உதிரிப்பாகத்தில் உள்ளடக்கப்பட்ட Nebulize உதிரிப்பாகத்தின் வழு காரணமாக செயலற்று காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | இது 17 ஆண்டுகள் பழமையான உபகரணம் என்பதுடன் இதுவரை ரூபா 17,284 மில்லியன் ஈட்டியுள்ளது. இது 2023 இல் நடைபெற்ற பொது முயற்சிகளுக்கான குழுவில் (COPE குழுவில்) விவாதிக்கப்பட்டதுடன் இந்த கருவியை முறையாக அகற்றுவதற்கு COPE குழு | செயல்படாத உபகரணங்களை அப்புறப்படுத்த வும், பரிசோதனைக்கு தேவையான நவீன கருவிகளை வாங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பரிந்துரைகளை வழங்கியது. அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | |

### 3.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தெங்கு, கித்துல், பனை மற்றும் அது தொடர்பான கைத்தொழில் பொருட்கள் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சரின் பாவனைக்காக அதன் பிரத்தியேக செயலாளரினால் அதிகாரசபையின் தலைவருக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு இணங்க, அதிகாரசபையின் வாகனமொன்று நிரந்தர சாரதியுடன் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாகனம் எழுத்து மூலம் அமைச்சிற்கு ஒப்படைக்கப் படவில்லை. குறித்த காலப்பகுதியில் இந்த வாகனம் ராகம கல்லூரியில் ஏற்பட்ட மோதலுக்கு பயன்படுத்தப்பட்டதாகவும் அச்சந்தர்ப்பத்தில் அதிகாரசபையினால் தற்காலிகமாக அமர்த்தப்பட்ட சாரதியே வாகனத்தை செலுத்தப்பட்டிருந்ததாகவும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. 2021 திசெம்பர் 04 முதல் 2022 ஜனவரி 19 வரை 719 கிலோமீட்டர் தூரத்திற்கு அமைச்சரின் ஒருங்கிணைப்புச் செயலாளர் மற்றும் அமைச்சு அதிகாரிகளால் இந்த வாகனத்தைப் பயன்படுத்தப்பட்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. | கௌரவ அமைச்சருக்கு தென்னை மற்றும் தென்னை சார்ந்த கைத்தொழில் துறை தொடர்பாக கொழும்புக்கு வெளியில் கண்காணிப்பு கடமைகளுக்காக செல்வதற்கு வாகனம் ஒன்று அவசரமாக் தேவைப்பட்டதால் தலைவரினால் 2020.01.21 அன்று இரவு இந்த அதிகார சபையின் சாரதியொருவர் ஈடுபடுத்தப்பட்டு ஓட்டுநர் பதிவு புத்தகத்துடன் வாகனத்தை ஒப்படைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த அதிகார சபையால் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் கடமைகளுக்காக மட்டுமே இந்த வாகனம் வழங்கப்பட்டிருந்தது. | சட்டரீதியற்ற இவ்வாறான வாகனங்கள் விடுவிக்கப்பட லாகாது. |

### 3.4 பெறுகைகள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நாரஹேன்பிட்ட பிரதான அலுவலகம் முன்னாக டிஜிடல் வெளிப்புற விளம்பரப் பலகையொன்றை நிறுவுவதற்கு ரூபா 4,998,000 தொகைக்கு ஒப்பந்தமொன்று உடன்படிக்கையொன்று இன்றி தனியார் நிறுவனத்திற்கு 2021 ஒக்டோபர் 06 ஆம் திகதி வழங்கப்பட்டு ரூபா 999,600 முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. விவரக்குறிப்புகளுக்கு இணங்க சம்பந்தப்பட்ட பணிகள் முடிக்கப்படாததால், இந்த விளம்பரப் பலகை செயற்படுத்தப்படாமல் செயலற்ற நிலையில் காணப்பட்டதுடன் வழங்குநரிடம் இருந்து பெறப்பட்ட ரூபா 249,900 ஆன செயற்திறன் பிணைமுறியின் காலமும் 2022 ஜனவரி | தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் தனியார் நிறுவனத்திற்கு வேலை வழங்குவது தொடர்பான உடன்படிக்கையை தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை முன்வைத்ததுடன், சேவைகளை வழங்கும் தனியார் நிறுவனம் அதற்கு இணங்கவில்லை. இந்த வேலை முடியும் வரை இரு தரப்பினரும் ஒப்பந்தத்தில் உடன்பாட்டை எட்ட | ஒப்பந்தத்தின் வேலையை முடிப்பது அல்லது செலுத்தப்பட்ட முற்பணத்தை திரும்பப் பெறுவது தாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 08 இல் காலாவதியாகி இருந்தது. | முடியவில்லை. இந்த தனியார் நிறுவனம் வழங்கிய செயல்திறன் பிணைமுறி 2022.01.08 அன்று காலாவதியானது, ஆனால் அதற்குள் 80% - 90% மொத்த வேலைகள் முடிந்துவிட்டதால், அதை நீட்டிக்க எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை. ஆனால் இப்பணிகள் ஒப்படைக்கப்பட்ட நாள் முதல் பல்வேறு குறைபாடுகள் காணப்பட்டன. | |
| (ஆ) | தென்னை தொடர்பான பொருட்கள் தொடர்பில் தெங்கு அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ள கண்காணிப்பு மற்றும் ஒழுங்குபடுத்தும் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தும் நோக்குடன் 2016 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை அச்சிடப்பட்டுள்ள ரூபா 11,639,811 பெறுமதியான 6,588,831 ஸ்டிக்கர்களில் 2022 ஆம் ஆண்டின் இறுதியில், 50 சதவீதம் அதாவது 3,251,722 ஸ்டிக்கர்கள் எஞ்சியிருந்தன. ஒரே நேரத்தில் ஒரு பெரிய தொகுதி ஸ்டிக்கர்களை அச்சடித்து, பல ஆண்டுகளாகத் தேவையை சரியான மதிப்பீடு செய்யாமல் சேமித்து வைப்பதன் மூலம் அதிகாரசபையின் நிதி திறம்பட தக்கவைக்கப்படவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | ஸ்டிக்கர் வகை லேபிள்கள் அதிகார சபையால் ஒழுங்குமுறை நோக்கங்களுக்காக வெற்றிகரமாகப் பயன்படுத்தப்படுகின்றன. 2023.07.18ஆம் திகதி வரை அதிகார சபையில் மீதமுள்ள லேபிள்களின் எண்ணிக்கை 1,733,870 ஆகும். இந்த வருடத்தின் எஞ்சிய மாதங்கள் உட்பட அடுத்த இரண்டு வருடங்களில் விற்பனை செய்யப்படலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது. | அச்சிடப்பட்ட ஸ்டிக்கர்கள் பயன்படுத்தப்பட வேண்டும். இவ்வாறான நடவடிக்கைகளுக்கு முன் தேவை பற்றிய சரியான மதிப்பீடு செய்யப்பட வேண்டும். |

### 3.5 செயற்திட்டம் அல்லது மூலதன வேலைகளில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 பெப்ரவரி 12 ஆந் திகதிய 559/அலெவி/05 ஆம் இலக்க பணிப்பாளர் குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் ஏற்றுமதி செய்யப்படுகின்ற ஒரு இளநீருக்கு ரூபா 5 மற்றும் 2021 ஆகஸ்ட் 20 ஆந் திகதிய 595/அலெவி/01 ஆம் இலக்க பணிப்பாளர் குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் ஏற்றுமதி செய்யப்படுகின்ற ஒரு இளநீருக்கு ரூபா 10 உம் 2019 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை அறவிடப்பட்டு இளநீர் அபிவிருத்திக்காக ரூபா 127,578,524 நாற்றுக்கள் செயற்திட்ட | பெருந்தோட்ட அமைச்சின் கௌரவ அமைச்சர் அவர்கள், தென்னை பயிர்ச்செய்கை சபை, தென்னை அபிவிருத்தி அதிகார சபை மற்றும் தென்னை ஆராய்ச்சி சபையின் தலைவர்களுடன் நடாத்திய கலந்துரையாடலின் பிரகாரம், தென்னை அபிவிருத்தி அதிகார | நிதியத்தை ஸ்தாபித்ததன் எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு ஒரு பயனுள்ள திட்டம் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும் |

| | | |
|---|---|---|
| நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டில், தென்னை பயிர்ச்செய்கை சபைக்கு அந்த நிதியத்தில் இருந்து ரூபா 25 மில்லியன் இளநீர் அபிவிருத்திக்காக வழங்கப்பட்டமை மற்றும் 2022 ஆம் ஆண்டில் ரூபா 1,456,000 செலுத்தி 20,000 விதை தேங்காய்கள் வாங்கப்பட்டமை தவிர, அந்த நிதியத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பான வேறு எந்த வேலைகளும் செய்யப்படாததால் 2022 திசெம்பர் 31 இல் அந்நிதியத்தில் ரூபா 101,122,525 ஆன மீதியொன்று காணப்பட்டது. அத்துடன், தென்னைப் பயிர்ச் செய்கை சபைக்கு வழங்கப்பட்ட ரூபா 25 மில்லியன் மீளாய்வாண்டின் இறுதியில் உரிய பணிகளுக்குப் பயன்படுத்தப்படாமல் நிலையான வைப்புத் தொகையில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | சபையினால் தென்னை ஆராய்ச்சிக்கான விசேட நாற்றங்கால் செயற்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டை வழங்கவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | |

## 3.6 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகார சபையில் 2022 திசெம்பர் 31 இல் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 259 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணி 187 ஆகும். புதவியணி வெற்றிடங்கள் 72 என்பதுடன் அதில் பணிப்பாளர் (நிர்வாகம்)', பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி),பணிப்பாளர் (சந்தைப்படுத்தல் மற்றும் சர்வதேச) மற்றும் உள்ளக கணக்காய்வாளர் ஆகிய பதவிகள் உள்ளடங்கி இருந்ததடன் அப்பதவிகளை நிரப்பிக் கொள்வதற்கு அதிகார சபையால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பணிப்பாளர் (நிர்வாகம்) பதவி, உள்ளக கணக்காய்வாளர் பதவிக்காக விளம்பரம் பிரசுரிக்கப்பட்டுள்ளது.. பணிப்பாளர் திட்டமிடல் அபிவிருத்தி நேர்முகப்பரீட்சை நடாத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | அத்தியாவசிய பதவிகளுக்கு அதிகாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கு விசேட அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |